முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை – 2018 யூலை

# (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

2018-07-21
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலம்*

  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

  (4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

  (5) *நிறற்படுத்தப்பட முடியாத கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.*

  (6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினா வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொல் நிரலிற் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

  (7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**திரு, திருமதி ரூபசிங்க** ஆகியோர் கனடாவில் 6 ஆண்டுகள் தொழில்புரிந்த பின்னர் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் கிட்டத்தட்ட ரூ. 10 மில்லியன் சேமிப்பைக் கொண்டுள்ளதுடன், தமது சொந்த வியாபார அமைப்பினை ஆரம்பிக்கத் திட்டமிடுகின்றனர்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **திரு, திருமதி ரூபசிங்க**வினால் ஆரம்பிக்கப்படக்கூடிய வியாபார அமைப்புகளின் இரண்டு (02) வகைகளைக் **குறிப்பிடுக**. (02 புள்ளிகள்)

(b) எந்தவொரு வியாபார அமைப்பினதும் பொதுவான நோக்கங்கள் (common objectives) மூன்றினை (03) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

தொழில்சார் சேவையினை வழங்கும் ஒருவர் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலொன்றினை (assurance engagement) பொறுப்பேற்கும்போது, முதலில் தாம் மேற்கொள்ளும் வேலையில் தாக்கத்தினைக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அது ஒரு நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலா அல்லது ஒரு வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலா என்பதனைத் தெளிவாக விளங்கிக்கொள்வர்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலுக்கும் (reasonable assurance engagement) வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலுக்கும் (limited assurance engagement) இடையில் மூன்று (03) வேறுபாடுகளை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

## வினா 03

**சனத்** என்பவர், இலங்கையின் மாணிக்கக் கற்களை விற்பனை செய்யும் முன்னணிச் சில்லறை வியாபாரமான வரையறுக்கப்பட்ட **றீஜன்ட் கம்பனியின்** 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்யும் கணக்காய்வு அணியில் ஒரு அங்கத்தவராவார். அவருக்கு **வரையறுக்கப்பட்ட றீஜன்ட் கம்பனியின்** ஆண்டிறுதித் தொக்கு மீதிகளுக்கான கணக்காய்வு விதிமுறைகளை (audit procedures) மேற்கொள்ள வேண்டிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**றீஜன்ட் கம்பனியின்** ஆண்டிறுதித் தொக்கு மீதிகளைக் கணக்காய்வு செய்யும்போது மேற்கொள்ள வேண்டிய நிதிக்கூற்று உறுதிப்பாடுகள் (financial statement assertions) இரண்டினை (02) ஒவ்வொன்றிற்கும் ஒரு கணக்காய்வு விதிமுறையினைத் தந்து **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனத்தினுள் தரம் பேணுவதற்கான தலைமைத்துவத்தின் பொறுப்புக்கள், தொடர்புபட்ட நெறிமுறைத் தேவைப்பாடுகள், வாடிக்கையாளர் தொடர்புமுறைகளை ஏற்றுக்கொண்டு அதனைத் தொடர்தல், மனித வளங்கள், ஈடுபடுத்தல்களை மேற்கொள்ளல் மற்றும் கண்காணிப்பு போன்ற மூலகங்களைக் கையாள்வதற்கு நிறுவனம் தரக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினைத் தாபித்துப் பேணுதல் வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) நிறுவனமொன்றில் தரக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தாபித்துப் பேணுவதன் நோக்கத்தைக் (objective) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்று வாடிக்கையாளர்களுடன் தொடர்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய அல்லது தொடர வேண்டிய சந்தர்ப்பங்கள் இரண்டினை (02) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

(A) உரிமமொன்றையும் அதன் சூழலையும் விளங்கிக்கொள்ளும்போது கணக்காய்வாளரினால் கவனத்திற் கொள்ளப்படும் பொதுவான பகுதிகளுள் ஒன்று உரிமத்தின் அகக்கட்டுப்பாடு ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**
உரிமத்தின் அகக் கட்டுப்பாட்டு முறைமையின் மூன்று (03) கூறுகளைக் (components) **குறிப்பிடுக**.
(03 புள்ளிகள்)

(B) (a) கணக்காய்வு இடர் என்பது, நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றினைக் கொண்டுள்ளபோது கணக்காய்வாளர் பொருத்தமற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினைத் தெரிவிக்கும் இடர் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

இயல்பாக இணைந்த இடர் (inherent risk) என்பதனால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(b) கீழே தரப்பட்டுள்ள ஊடுசெயல்கள் வேறுபட்ட உரிமங்கள் தொடர்புபட்டவை ஆகும் :

(i) **வரையறுக்கப்பட்ட கப்ஸ் கம்பனி** கடதாசிக் கோப்பைகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள அதேவேளை வரையறுக்கப்பட்ட **பட்டர் கேக்ஸ் கம்பனி** பட்டர் கேக் விற்பனை செய்யும் வெதுப்பகத்தை (bakery) நடாத்துகின்றது. இந்த இரு கம்பனிகளும் அவற்றின் வியாபாரங்களை ஒருங்கிணைத்து ஒரு தனி வியாபாரமான **வரையறுக்கப்பட்ட கப்கேக்ஸ் கம்பனியைத்** தாபிக்கத் தீர்மானித்துள்ளன. திட்டமிடப்பட்ட இந்த ஒருங்கிணைப்பு ஊடுசெயலானது சிக்கலான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் இரு கம்பனிகளின் முகாமையின் கணிசமான தலையீடுகள் ஆகியவற்றைச் சம்பந்தப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) **வரையறுக்கப்பட்ட தப்ரோ லங்கா (TL)** உலக வர்த்தக மையத்தின் (WTC) கிழக்குக் கோபுர கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள அலுவலக இடமொன்றினைத் தொழிற்பாட்டுக் குத்தகையின் கீழ் பெற்றுள்ளது. ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் **TL** ஆனது குத்தகைக் கொடுப்பனவு ரூ. 450,000/- இனைப் பணமாக WTC யின் உரிமையாளர்களுக்குச் செலுத்துகின்றது. கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதும் கணக்கீட்டுப் பதிவுகள் இற்றைப் படுத்தப்படுகின்றன (மேற்கொள்ளப்படுகின்றன).

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சம்பவமும் கணிசமான இடருக்கு வழிவகுக்கின்றதா என காரணங்களுடன் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட சோமரத்ன அன்ட் சன்ஸ் கம்பனி** பலசரக்குக் கடையை நடத்துகின்ற சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பனி தனது சொந்தத் தலைமையகக் கட்டடத்தையும் கடையையும் கண்டியில் அமைத்துள்ளது. 2017 மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளம் கடைக்கும் அதன் தலைமையகத்திற்கும் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. உரிய நேரத்தில் கம்பனி ஆளணியினரால் அப்புறப்படுத்த இயலாததன் காரணமாக சான்று ஆவணங்கள் (supporting documents) உட்பட கம்பனியின் சகல பதிவுகளினதும் 95% ஆனவை முற்றாக அழிவடைந்தன. கம்பனி எவ்வித வெளிச் சேமிப்பு விதிமுறைகளையும் (backup procedures) கொண்டிருக்கவில்லை.

**வரையறுக்கப்பட்ட சோமரத்ன அன்ட் சன்ஸ் கம்பனியின்** 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கு உமது கணக்காய்வு நிறுவனம் அமர்த்தப் பட்டுள்ளதாகக் கொள்க.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) பொதுவாக, மாற்றப்பட்ட அபிப்பிராயம் (modified opinion) தேவைப்படும் சந்தர்ப்பத்தினை உதாரணமொன்றுடன் **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சோமரத்ன அன்ட் சன்ஸ் கம்பனியின்** நிதிக் கூற்றுக்கள் மீது வழங்கப்படக்கூடிய கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகையை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) கம்பனியானது தனது சகல கணக்கீட்டுப் பதிவுகளினதும் முறையான வெளிச் சேமிப்பை (back-up) பேணி வந்திருப்பின், மேலே (b) யில் உமது விடை எவ்வாறு மாற்றமடையுமென **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) அடிப்படைத் தத்துவங்களுடனான ஒத்திசைவானது பலதரப்பட்ட புறநிலைகள் மற்றும் தொடர்பு முறைகளால் அச்சுறுத்தப்படுதல் சாத்தியமானதாகும். அடிப்படைத் தத்துவங்களுடன் ஒத்திசைவுக்கான அச்சுறுத்தல்கள் பல வகைகளைச் சாரும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

அடிப்படைத் தத்துவங்களுடன் ஒத்திசைவுக்கான கீழ்வரும் அச்சுறுத்தல்களின் வகைகளை **விபரிக்குக.**

(i) சுய மீளாய்வு அச்சுறுத்தல் (Self-review threat)

(ii) மிரட்டுதல் அச்சுறுத்தல் (Intimidation threat) (04 புள்ளிகள்)

(b) **ஆன் PLC கம்பனியானது** உமது கணக்காய்வு நிறுவனமான **த சில்வா அன்ட் அசோசியேட்ஸ்** இன் மூன்று பாரிய வாடிக்கையாளர்களுள் ஒன்றாகும். **ஆன் PLC** ஆண்டிற்கு ரூ. 4 மில்லியனை கணக்காய்வுக் கட்டணமாகச் செலுத்துவதுடன் **த சில்வா அன்ட் அசோசியேட்ஸ்** இன் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டண மொத்த வருமானம் ரூ. 12 மில்லியன் ஆகும். 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் **ஆன் PLC** கணிசமான சந்தை விருத்திச் செலவினை மேற்கொண்டதுடன் அதனை நடைமுறையல்லாச் சொத்தாக மூலதனப்படுத்தியிருந்தது. இருப்பினும், இந்தச் செலவினம் மூலதனப்படுத்தப்படுவதற்கான தேர்வு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியிருக்கவில்லை என்பதுடன், சரியான கணக்கீட்டுக் கையாள்கையானது அந்தச் செலவினத்தை வருமானக் கூற்றில் ஒரு செலவாக தாக்கல் செய்ய வேண்டியதாகும். **ஆன் PLC** யினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கையாள்கையுடன் **த சில்வா அன்ட் அசோசியேட்ஸ்** இணங்காத பட்சத்தில் அவர்களை மீள் நியமனம் செய்வதில்லையென **ஆன் PLC** யின் முகாமை தெரிவித்துள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேலே தரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் **த சில்வா அன்ட் அசோசியேட்ஸ்**க்கு பிரயோகிக்கக்கூடிய, அடிப்படைத் தத்துவங்களுடன் ஒத்திசைவுக்கான அச்சுறுத்தல்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

(A) இலங்கை பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் ஆகியவற்றால் கூட்டாக வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுமை – 2013 மீதான சிறந்த நடைமுறைக் கோவையில் இலங்கையின் கூட்டாண்மை ஆளுமை வழிகாட்டல்கள் (Corporate governance guidance) தரப்பட்டுள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) கூட்டாண்மை ஆளுமையின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கூட்டாண்மை ஆளுமை மீதான சிறந்த நடைமுறைக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று (03) வழிகாட்டல்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(B) நாகரிக உருப்படிகளை வடிவமைப்பதில் புலமைபெற்ற **திருமதி மடபாத்த** தமது வடிவமைப்புகளுக்காக 2016 ஆண்டில் விருதினைப் பெற்றுள்ளார். விருதினைப் பெற்றதன் பின்னர், நாகரிக உருப்படிகளின் வடிவமைப்பிற்காக அவர் பல கட்டளைகளைப் பெற்றுவந்ததன் காரணமாக, அவர் ஒரு சிறிய ஆடை உற்பத்தி நிறுவனமொன்றினை ரூ. 30 மில்லியனை வங்கிக் கடனாகப் பெற்று ஆரம்பித்தார். அவருக்குக் கணக்கீட்டு அறிவு இல்லாமையால் நிதிச் செயற்பாடுகளை முகாமை செய்வதற்கு ஒரு கணக்காளரைப் பணிக்குச் சேர்க்குமாறு வங்கி முகாமையாளர் பல தடவைகள் அவரை வற்புறுத்தி வந்துள்ளார். அவர் உங்களை தமது வியாபாரக் கணக்காளராகப் பணிக்குச் சேர்த்திருப்பதாகக் கொள்க. இது நீங்கள் வேலைக்குச் சேர்ந்த முதலாவது வாரமாகும். நீங்கள் கீழ்வரும் தகவல்களைச் சேகரித்துள்ளீர்கள்.

(1) தொழிற்சாலைக் கட்டட நிருமாணம் பெரும்பாலும் பூர்த்தியடைந்துள்ளது. **திருமதி மடபாத்த** ஏற்கனவே ஆறு கட்டளைகளைப் பூர்த்திசெய்து சில்லறை விற்பனை நிலையங்களுக்கு வழங்கியுள்ளார்.

(2) இந்தத் தொழிற்சாலையில் நாற்பத்தைந்து (45) ஊழியர்கள் வேலை செய்கின்றனர்.

(3) **திருமதி மடபாத்த** பல சந்தர்ப்பங்களில் தாமாகவே துணிகளை உள்ளூர்ச் சந்தையில் கொள்வனவு செய்துவந்ததுடன், இப்போது மேற்பார்வையாளர் கொள்வனவுச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்.

(4) கொள்வனவுகள் ஒரு மாதக் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

(5) தேவைப்படும் தரக் குறிப்பீடுகள் (quality specifications) இல்லாத காரணத்தினால் கடந்த வாரம் ஒரு கொள்வனவுக் கட்டளை வழங்குநருக்குத் திருப்பியனுப்பப்பட்டது.

(6) மேலும், வழங்குநர்கள் தவறான தொகைகளுக்கு அல்லது வழங்கப்படாத பொருட்களுக்கு விலைப்பட்டியல்களைச் சமர்ப்பித்திருந்த அநேகமான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(7) **திருமதி மடபாத்த** முன்னர் கொள்வனவு செய்த விலைகளிலும் பார்க்க அதிக விலைக்கு மேற்பார்வையாளர் சில உருப்படிகளைக் கொள்வனவு செய்திருந்தார்.

(8) தனித்தன்மை வாய்ந்த வடிவமைப்பின் காரணமாக கேள்வி அதிகரித்து வருவதுடன் வியாபாரம் விரைவாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதியாக இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, கொள்வனவுச் செயன்முறையை ஆராய்ந்து உமது அவதானத்தைத் தமக்குத் தெரிவிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். அந்தக் கலந்துரையாடலின் போது நிறுவனத்தில் சிறந்த அகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினைக் கொண்டிருப்பதன் அவசியம் பற்றி நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். சிறந்த அகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை நடைமுறைப் படுத்துவதன் மூலம் நிறுவனத்தில் வழுக்கள், தவறுகள் மற்றும் மோசடிகள் இடம்பெறாமலிருப் பதற்கான 100% உறுதிப்பாட்டினை வழங்கமுடியுமா எனவும் **திருமதி மடபாத்த** தெரிந்துகொள்ள விரும்புகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) **திருமதி மடபாத்த** அவர்களின் நிறுவனத்திற்குப் பொருத்தமான கொள்வனவுச் செயன்முறையை (பெறுகைச் செயன்முறையை) **விபரிக்குக.** (உமது விடையானது உசிதமான கொள்வனவுச் செயன்முறையொன்றின் குறைந்தபட்சம் 4 படிமுறைகளுடன் சான்றுப்படுத்தப்பட வேண்டும்).
(08 புள்ளிகள்)

(b) சிறந்த கொள்வனவுச் செயன்முறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதனால் இடர்த் தணிப்பு (குறைப்பு) ஏற்படக்கூடிய மூன்று (03) இடர்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) நிறுவனத்தில் சிறந்த அகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினைக் கொண்டிருப்பதன் மூலம் 100 % வழுக்கள் அற்ற நிலைமையினைத் **திருமதி மடபாத்த** அடைய முடியுமா என **ஆராய்க.**
(04 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) உமது கணக்காய்வு நிறுவனத்தின் ஒரு வாடிக்கையாளரான **சான்ரோ லங்கா PLC** விசேட பணி ஒன்றிற்காக உமது கணக்காய்வு நிறுவனத்தை அணுகியுள்ளது. அதன் தாய்க் கம்பனியான **சான்ரோ UK Org.** எனும் இங்கிலாந்துக் கம்பனி, ஒழுங்குபடுத்துநருக்கு சமர்ப்பிப்பதற்காக உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்கள் (related party transactions) மற்றும் உறவுமுறைகள் பற்றிய கூற்று ஒன்றினைத் தயாரிக்குமாறு **சான்ரோ லங்கா PLC** யை விசேடமாகக் கோரியுள்ளது.

**சான்ரோ லங்கா PLC** யின் பணிப்பாளர்கள் 2018 யூன் 30 இல் முடிவடைந்த ஆறு மாத காலத்திற்கு இந்தக் கூற்றினைத் தயாரித்துள்ளனர். இந்தக் கூற்று LKAS 24 – உறவுமுறைத் தரப்பினர் வெளிக் காட்டல்கள் நியமத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. இந்தக் கூற்று **சான்ரோ லங்கா PLC** யின் கணக்காய்வாளரினால் பரீட்சிக்கப்பட்டு, அதன் உள்ளடக்கமானது LKAS 24 இன் நியமங்களுக்கு அமைவாக இருக்கின்றனவா என்பது பற்றிய அபிப்பிராயத்தினை வழங்க வேண்டும் என்று தாய்க் கம்பனி கோரியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்படி ஈடுபடுத்தலானது ஒரு உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலா (assurance engagement) என **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(B) மென்பொருள் தீர்வுக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட ரெக்ஸ் கனெக்ஷன்ஸ் (தனி) கம்பனியின் (TC)** கணக்காய்வாளராக உமது கணக்காய்வு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இது ஒரு புதிய கணக்காய்வு ஆவதுடன் ஈடுபடுத்தற் பங்காளர் கணக்காய்வுக்கான சிரேட்ட பொறுப்பாளராக உங்களை நியமித்துள்ளார். வரைவு முற்றடக்க வருமானக் கூற்றுக்களும் நிதிநிலைக் கூற்றுக்களும் கீழே தரப்பட்டுள்ளன :

**வரைவு முற்றடக்க வருமானக் கூற்றுக்கள்** *(ரூ. '000)*

| **ஆண்டு முடிவு** | **2018 மார்ச் 31** | **2017 மார்ச் 31** |
|---|---|---|
| **வருமானம் :** | | |
| மென்பொருள் விருத்தியாக்கம் | 18,750 | 45,320 |
| வருடாந்தப் பராமரிப்பு உடன்படிக்கைக் கட்டணங்கள் | 1,120 | 6,512 |
| வன்பொருள் விற்பனை | 1,552 | 322 |
| | **21,422** | **52,154** |
| **செலவுகள் :** | | |
| சம்பளம் | 16,564 | 21,462 |
| EPF மற்றும் ETF | 23 | 1,719 |
| பிரயாணச் செலவு | 565 | 3,765 |
| அலுவலகப் பராமரிப்பு | 3,265 | 340 |
| தொலைபேசியும் மின் கட்டணமும் | 1,654 | 1,265 |
| கணினிப் பராமரிப்பு | 765 | 915 |
| | **22,836** | **29,466** |
| **இலாபம் / (நட்டம்)** | **(1,414)** | **22,688** |

**வரைவு நிதிநிலைக் கூற்றுக்கள்** *(ரூ. '000)*

| திகதியில் | 2018 மார்ச் 31 | 2017 மார்ச் 31 |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| காணியும் கட்டடமும் | 2,550 | 5,720 |
| மோட்டார் வாகனங்கள் - வான் | 4,300 | 4,300 |
| தளபாட இணைப்புகள் | 656 | 652 |
| | **7,506** | **10,672** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| வியாபார வருமதிகள் | 8,565 | 750 |
| காசும் காசுச் சமானங்களும் | 1 | 8 |
| | **8,566** | **758** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **16,072** | **11,430** |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் – சாதாரண பங்குகள் | 1,500 | 1,500 |
| கைக்கொள் இலாபம் | 675 | 2,089 |
| | **2,175** | **3,589** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன் | 6,100 | - |
| வியாபார சென்மதிகள் | 4,100 | 2,730 |
| உறவுமுறைத் தரப்பினர் - சென்மதிகள் | 3,697 | 5,111 |
| | **13,897** | **7,841** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **16,072** | **11,430** |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒரு உதாரணத்தின் உதவியுடன் ''கணக்காய்வுச் சான்று'' (audit Evidence) எனும் பதத்தினை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ரெக்ஸ் கனெக்ஷன்ஸ் (தனி) கம்பனியின்** கணக்காய்வு விதிமுறைகளை மேற்கொள்ளும்போது விசேட கவனம் தேவைப்படும் எட்டு (08) பகுதிகளை **இனங்காண்க.** (08 புள்ளிகள்)

(c) 2018 மார்ச் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூ. 3,697,000/- உறவு முறைத் தரப்பினர் சென்மதி மீதி தொடர்பில் நீங்கள் மேற்கொள்ளக்கூடிய ஆறு (06) கணக்காய்வு விதிமுறைகளை (audit procedure) **நிரற்படுத்துக.** (06 புள்ளிகள்)

மேலே பகுதி (b) யில் குறிப்பிட்ட பகுதிகளை உறுதிப்படுத்துவதற்காக **TC** யின் முகாமையிடமிருந்து முகாமைப் பிரதிநிதித்துவக் கடிதமொன்றினை நீங்கள் கேட்டுள்ளீர்கள். எனினும், முகாமையானது கேட்கப்பட்ட எழுத்துமூலமான பிரதிநிதித்துவத்தை வழங்கவில்லை.

(d) அத்தகைய சந்தர்ப்பத்தில் நீங்கள் மேற்கொள்ளும் இரண்டு (02) நடவடிக்கைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |